Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிற்றுக்கிழமை, டிசம்பர் 03 2023 | இதழ் 140

# மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கரில் ஆட்சியை பிடிக்கிறது பாஜக
# இந்தி பேசும் மாநிலங்களில் செல்வாக்கை இழந்து வரும் காங்கிரஸ்
# கடந்த தேர்தலை விட 4 மாநிலங்களிலும் ஆதிக்கம் செலுத்தும் பாஜக

சென்னை, 03 டிசம்பர் 2023: **ஒட்டுமொத்தமாக பார்க்கும்போது பாரதீய ஜனதா 4 மாநிலங்களில் கடந்த தேர்தலை விட கூடுதல் இடங்களை பிடிக்கும் வாய்ப்பு உள்ளது.**

**மத்தியப்பிரதேச மாநிலத்தில் 164 இடங்களில் முன்னிலை வகிக்கிறது. கடந்த தேர்தலை விட இது 55 இடங்கள் அதிகமாகும்.**

**ராஜஸ்தானில் 113 இடங்களில் முன்னிலை வகிக்கிறது. கடந்த தேர்தலை விட இது 40 இடங்கள் அதிகமாகும்.**

**சத்தீஸ்கரில் பாரதீய ஜனதா கூட்டணி 54 இடங்களில் முன்னிலை வகிக்கிறது. கடந்த தேர்தலை விட இது 39 இடங்கள் அதிகமாகும்.**

**தெலுங்கானாவில் பாரதீய ஜனதா கூட்டணி 9 இடங்களில் முன்னிலை வகிக்கிறது. கடந்த தேர்தலை விட இது 8 இடங்கள் அதிகமாகும்.**

**4 மாநில சட்டப்பேரவைகளுக்கு நடைபெற்ற தேர்தல் முடிவுகள் இன்று அறிவிக்கப்பட்டன. மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கரில் பாரதீய ஜனதா கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. அதேபோல் தெலுங்கானாவில் காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது. ராஜஸ்தான், சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சியை பறிகொடுத்துள்ளது.**

மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், தெலுங்கானா மற்றும் மிசோரம் ஆகிய 5 மாநிலங்களிலும் நவம்பர் 7 முதல் 30-ம்தேதி வரை வாக்குப் பதிவு நடைபெற்றது. மிசோரம் தவிர 4 மாநிலங்களுக்கான வாக்குகள் எண்ணும் பணி இன்று துவங்கி நடைபெற்று வருகிறது.

இன்று காலை வாக்கு எண்ணிக்கை மையத்திற்கு வந்த வேட்பாளர்கள், கட்சி முகவர்கள் கடும் சோதனைக்குப்பின் உள்ளே அனுமதிக்கப்பட்டனர். இதை தொடர்ந்து காலை 8 மணிக்கு தபால் வாக்கு எண்ணும் பணி தொடங்கியது. அதன்பின் வாக்கு எந்திரத்தில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி துவங்கி நடைபெற்று வருகிறது.

மத்தியப்பிரதேசத்தில் சிவராஜ்சிங் சவுகான் தலைமையிலான பாஜக ஆட்சி நடைபெற்று வருகிறது. மத்தியப்பிரதேசத்தில் பெரும்பான்மைக்கு 116 இடங்கள் தேவைப்படும் சூழலில் பாரதீய ஜனதா 164 இடங்களில் முன்னிலை வகித்து வருகிறது. மத்தியப்பிரதேசத்தில் பாரதீய ஜனதா ஆட்சியை தக்கவைத்துள்ளது.

ராஜஸ்தானில் அசோக் கெலாட் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி நடைபெற்று வருகிறது. தேர்தலில் பாரதீய ஜனதா முன்னிலையில் உள்ள நிலையில் ராஜஸ்தானில் காங்கிரஸ் ஆட்சியை இழக்கிறது. பெரும்பான்மைக்கு 100 இடங்கள் தேவைப்படும் சூழலில் பாரதீய ஜனதா 113 இடங்களில் முன்னிலை வகித்து வருகிறது. இதன் மூலம் ராஜஸ்தானிலும் பாரதீய ஜனதா ஆட்சியை பிடித்துள்ளது.

சத்தீஸ்கரில் பூபேஷ் பாகேல் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி நடைபெற்று வருகிறது. தேர்தலில் பாரதீய ஜனதா 54 இடங்களில் முன்னிலையில் உள்ளது.

தெலுங்கானாவில் சந்திரசேகர ராவ் தலைமையிலான பாரதிய ராஷ்டிர சமிதி ஆட்சி நடைபெற்று வருகிறது. தேர்தலில் காங்கிரஸ் 65 இடங்களில் முன்னிலையில் உள்ள நிலையில் தெலுங்கானாவில் பி.ஆர்.எஸ். ஆட்சியை இழக்கிறது. இதன் மூலம் தெலுங்கானாவில் காங்கிரஸ் ஆட்சியை பிடித்துள்ளது.

230 தொகுதிகளை கொண்ட மத்தியப்பிரதேச மாநிலத்தில் சிவராஜ் சிங் சவுகான் தலைமையிலான பாரதீய ஜனதா ஆட்சி நடைபெற்று வருகிறது. கடந்த தேர்தலின்போது காங்கிரஸ் கட்சிதான் ஆட்சியை பிடித்தது. ஆனால், காங்கிரஸ் கட்சியின் ஜோதிராதித்யா சிந்தியா 20-க்கும் மேற்பட்ட காங்கிரஸ் எம்.எல்.ஏ.-க்களுடன் பாரதீய ஜனதாவில் இணைந்தார். இதனால் காங்கிரஸ் ஆட்சியை இழந்தது.

தற்போது எப்படியாவது ஆட்சியை பிடித்துவிட வேண்டும் என்ற நோக்கத்தில் காங்கிரஸ் கடும் தேர்தல் பிரச்சாரம் செய்தது. இருந்தபோதிலும், தேர்தல் முடிவில் அந்த கட்சிக்கு பின்னடைவுதான் ஏற்பட்டுள்ளது. வாக்கு எண்ணிக்கை தொடங்கியதில் இருந்து பாரதீய ஜனதா முன்னிலை வகித்து வருகிறது. 2 மணி நிலவரப்படி 164 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது. இதனால் சிவராஜ் சிங் சவுகான் மீண்டும் முதலமைச்சராவது உறுதியாகிவிட்டது.

கடந்த முறை பாரதீய ஜனதா 109 தொகுதிகளை பிடித்திருந்தது.

ராஜஸ்தானில் மொத்தம் 200 சட்டப்பேரவை தொகுதிகள் உள்ளன. இவற்றில், கங்காநகர் மாவட்டத்தின் காரன்பூர் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் குர்மீத் சிங் இறந்ததால், அந்த தொகுதியில் மட்டும் தேர்தல் தள்ளிவைக்கப்பட்டது. மீதமுள்ள 199 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக கடந்த மாதம் 25-ம் தேதி தேர்தல் நடைபெற்றது.




199 தொகுதிகளில் பாரதீய ஜனதா 113 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது. இதனால் பாரதீய ஜனதா தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க இருக்கிறது.

ராஜஸ்தானில் முதல்வர் வேட்பாளரை முன்னிறுத்தாமல் பாரதீய ஜனதா தேர்தலை சந்தித்தது. இதனால் முதலமைச்சர் யார்? என்ற கேள்வி எழுந்துள்ளது. கடந்த முறை முதலமைச்சராக இருந்த வசுந்தரா ராஜே சிந்தியாவை பாரதீய ஜனதா ஓரங்கட்டுகிறது என தேர்தல் பிரச்சாரத்தின்போது தெரிவிக்கப்பட்டது. அதை நிரூபிக்கும் வகையில் பிரதமர் மோடியின் தொடக்கக்கால பிரச்சாரத்தில் வசுந்தரா ராஜே சிந்தியா கலந்து கொள்ளவில்லை. கடைசி கட்டத்தில் பிரமதர் மோடியுடன் ஒரு மேடையில் தோன்றினார்.

இதனால் வசுந்தரா ராஜே சிந்தியா மீண்டும் முதலமைச்சராக பதவி ஏற்க வாய்ப்புள்ளது. இவர் ஜல்ராபதான் தொகுதியில் முன்னிலை பெற்றுள்ளார்.

ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட், தான் போட்டியிட்ட சர்தார்புரா தொகுதியில் முன்னிலையில் உள்ளார். ஆனால் ராஜஸ்தானில் காங்கிரசை விட பாஜக முன்னிலையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

சத்தீஸ்கரில் பாரதீய ஜனதா கட்சி 54 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.

சத்தீஸ்கர் மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்று வருகிறது. கடந்த தேர்தலில் 90 இடங்களில் 68 இடங்களில் வெற்றி பெற்று காங்கிரஸ் ஆட்சியை பிடித்தது. இந்த முறையும் காங்கிரஸ்தான் ஆட்சியை பிடிக்கும் என தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்புகள் தெரிவித்தன.

வாக்கு எண்ணிக்கை தொடங்கியபோது காங்கிரஸ் கட்சி முன்னிலை வகித்தது. இதனால் எளிதாக காங்கிரஸ் ஆட்சியை பிடிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

அதன்பின் பாரதீய ஜனதா முன்னிலை வகிக்கத் தொடங்கியது. ஒரு கட்டத்தில் இரு கட்சிகளும் தலா 45 தொகுதிகளில் முன்னிலை பெற்றிருந்தது.

2 மணி நிலவரப்படி பாரதீய ஜனதா 54 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது. காங்கிரஸ் 34 தொகுதிகளில் முன்னிலைப் பெற்றுள்ளது.

காங்கிரஸ் கடந்த தேர்தலை விட 32 இடங்கள் பின்தங்கிய நிலையில், கடந்த தேர்தலைக் காட்டிலும் பாரதீய ஜனதா 39 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

சத்தீஸ்கர் முதல்வர் பூபேஸ் பாகல், தான் போட்டியிட்ட பதான் தொகுதியில் முன்னிலையில் உள்ளார்.

தெலுங்கானாவில் காங்கிரஸ் 65 தொகுதிகளிலும், பாரதீய ஜனதா 9 தொகுதிகளிலும், ஆளும் பிஆர்எஸ் கட்சி 39 தொகுதிகளிலும் முன்னிலை வகிக்கின்றன.

தெலுங்கானா முதல்வர் சந்திரசேகர ராவ், தான் போட்டியிட்ட இரு தொகுதிகளிலும் பின்னடைவை சந்தித்துள்ளார்.

வடகிழக்கு மாநிலமான மிசோரமில் மொத்தமுள்ள 40 தொகுதிகளுக்கும் ஓட்டு எண்ணும் பணி நடைபெற விருந்தது. ஆனால், பல்வேறு தரப்பினர் விடுத்த கோரிக்கையை ஏற்று, ஓட்டு எண்ணும் பணி நாளை மாற்றப்பட்டது.

ராஜஸ்தான், மத்தியப்பிரதேசதம், மற்றும் சத்தீஸ்கரில் பாஜக தொடர்ந்து முன்னிலை வகித்து வரும் நிலையில் தொண்டர்கள் இனிப்புகள் வழங்கி மேளதாளத்துடன் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# ‘மிக்ஜாம்’ புயல்: முன்எச்சரிக்கை நடவடிக்கைகள்; அமைச்சர்கள் நேரு, சேகர்பாபு ஆய்வு



சென்னை, 03 டிசம்பர் 2023: நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை தலைமையிடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்திலிருந்து கண்காணிக்கப்படுவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் கே.என்.நேரு தலைமையில், அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் வங்கக்கடலில் உருவாகியுள்ள புயல் சின்னத்தின் தாக்கத்தை எதிர்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் நேரு பேசும்போது தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அறிவுரையின்படி, கனமழையினை முன்னிட்டும் மிக்ஜாம் புயல் தாக்கத்தினை எதிர்கொள்ளும் வகையிலும் மக்களுக்குத் தேவையான பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அலுவலர்கள் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். 162 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த முகாம்கள் அனைத்தும் அனைத்து வசதிகளுடனும் இருப்பதை உறுதி செய்திட வேண்டும்.

மழையினால் பாதிக்கப்படும் மக்களுக்கும், நிவாரண முகங்களில் தங்குபவர்களுக்கும் உணவினை வழங்கிட வேண்டும். மோட்டார் பம்புகள், ஜெனரேட்டர்கள் தேவையான அளவிற்கு வைத்துக்கொள்ள வேண்டும். மழையினால் விழுகின்ற மரங்கள், கிளைகள் ஆகியவற்றை உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டும்.

போர்க்கால அடிப்படையில்...

தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்குவதை போர்க்கால அடிப்படையில் உடனடியாக அகற்றிட வேண்டும். மக்களிடம் இருந்து கட்டுப்பாட்டு அறைக்கு வரும் புகார்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிட வேண்டும். மழை மற்றும் புயலின் தாக்கத்தை எதிர்கொள்ளும் வகையில் அணைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் விழிப்புணர்வுடன் சிறப்பாக பணியாற்றிட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் நேரு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

சென்னை மாநகராட்சியை ஒட்டிய பகுதிகளான பெரும்பாக்கம், மேடவாக்கம், கேளம்பாக்கம், ஐயப்பன்தாங்கள், காட்டுப்பாக்கம் உள்ளிட்ட பகுதிகள் திருவள்ளூர் மாவட்டத்தை சார்ந்த ஊராட்சி பகுதிகளாகும் இந்த இடங்களில் தேங்கிய மழைநீரினை அகற்றிட ஊராட்சி பகுதி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை குடிநீர் மற்றும் கழிநீரகற்று வாரியம் சார்பில் 90 இடங்களில் மோட்டார் பம்புகள், 129 ஜெனரேட்டர்கள் தயார் நிலையில் உள்ளன. அவசர தேவைகளுக்காக நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது அனைத்து பணிகளும் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறப்பு மருத்துவமுகாம்

பொதுமக்களுக்கு மழைக்காலங்களில் நோய்த்தொற்று ஏற்படாதவகையில், நாள்தோறும் 35 முதல் 40 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில், 318 மருத்துவ அலுவலர்களும், 635 செவிலியர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களும் தயார் நிலையில் பணிபுரிந்து வருகின்றனர். போதுமான மருந்துகளும் இருப்பில் உள்ளன.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிருவாகத் துறை அரசு முதன்மைச் செயலாளர் தா.கார்த்திகேயன், நகராட்சி நிருவாக இயக்குநர் சு.சிவராசு, கூடுதல் ஆணையாளர் ஆர்.லலிதா, இணை ஆணையாளர் ஜி.எஸ்.சமீரன், கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டி.ஜி.வினய், செயல் இயக்குநர் செ.சரவணன், காணொலிக்காட்சியின் வாயிலாக மண்டல கண்காணிப்பு அலுவலர்கள், துணை ஆணையாளர்கள் ஷரண்யா அறி, எம்.பி.அமித், கே.ஜெ.பிரவீன்குமார், கட்டா ரவி தேஷா, தனியார் வானிலை ஆர்வலர் ஆர்.பிரதீப் ஜான், தலைமைப் பொறியாளர்கள், மண்டல அலுவலர்கள் உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பன்னாட்டு திரை - பண்பாடு ஆய்வகம் அதன் முதல் பட்டயமளிப்பு விழாவைக் கொண்டாடியது




சென்னை, 03 டிசம்பர் 2023: ஆய்வகத்தின் நிறுவனரும் தலைவருமான இயக்குநர் வெற்றிமாறன், "விமர்சனங்களையும் பின்னூட்டங்களையும் திறந்த மனதோடு ஏற்றுக் கொண்டு செயல்படுங்கள்; அதுதான் சிறந்த படைப்பாளி என்ற அடையாளத்தை பெறுவதற்கான ஒரே வழி", என்ற அறிவுரையைத் தந்ததோடு ஐந்தாண்டுகளுக்கு முன் விதையாய் ஊன்றிய ஓர் எண்ணம் இன்று துளிர் விட்டிருப்பது மனநிறைவைத் தருகிறது என்றும் நெகிழ்ச்சியோடு பகிர்ந்து கொண்டார். திறமைகளும் ஆழ்ந்த தேடல்களும் நிரம்பித் ததும்பிய இந்த முதலாம் பட்டயமளிப்பு விழாவை நடத்தியதன் வாயிலாகப் பன்னாட்டு திரை - பண்பாடு ஆய்வகம் கல்விப் புலத்தில் குறிப்பிடத் தகுந்ததொரு தடத்தைப் பதித்திருக்கிறது. இந்தப் பட்டயமளிப்பு விழா வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் வேந்தர் உயர்திரு.ஐசரி கணேஷ் அவர்களின் தலைமையிலும் முன்னணி திரைப்படத் தயாரிப்பாளர் திரு.கலைப்புலி எஸ்.தாணு மற்றும் திரைப்பட தயாரிப்பாளரும் இயக்குனருமான திரு. எல்ரெட் குமார் ஆகியோரின் முன்னிலையிலும் நடைபெற்றது.

திரைக்கலையின் நுன் முகங்களைத் தழுவி, முதலாம் திரள் மாணவர்களின் கைவண்ணத்தில் உருவாகிய குறும்படங்கள் நிகழ்ச்சியில் அடுத்தடுத்து திரையிடப்பட்டன. கதைச் சொல்லும் அழகியல் மற்றும் காட்சிக் கோப்பு என மாணவர்களின் தனித் திறன்களை வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருந்த, இத்திரைபடங்கள் பார்வையர்களின் கரவொலியைப் பெற்றன. பல்வேறு கதைக்களங்கள் மாறுபட்ட சமூக கண்ணோட்டங்கள் என மாணவர்களின் இந்தப் படைப்புகள் பன்னாட்டு திரை - பண்பாடு ஆய்வகத்தின் 'திரைகள் வழி சமத்துவம் நோக்கி' என்ற முக்கிய இலக்கினை அடையும் சாத்தியத்தை உறுதிப்படுத்தின என்பது குறிப்பிடத்தக்கது.

வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் வேந்தர் ஐசரி கே.கணேஷ் அவர்கள் தனது பட்டயமளிப்பு விழாப் பேருரையில், இந்தப் புதிய படைப்பாளிகளுக்கு தங்களது திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தின் வாயில்கள் எப்போதும் திறந்திருக்கும் என்றும் ஐஐஎஃப்சியின் அனைத்து எதிர்கால முயற்சிகளுக்கும் அவரது வேல்ஸ் பல்கலைக்கழகம் துணை நிற்கும் என்றும் குறிப்பிட்டார். அவரது இந்த அறிவிப்பை மாணவர்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றனர். சிறப்பு விருந்தினர்கள் கலைப்புலி.எஸ்.தாணு மற்றும் திரு.எல்ரெட் குமார் ஆகியோரும் தங்களது வாழ்த்துரைகளில் தங்கள் அனுபவங்களையும் விலைமதிப்பற்ற அறிவுரைகளையும் வழங்கினர்.

இந்த பட்டயமளிப்பு விழாவானது, மாணவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்புக்கு சான்றாக மட்டுமன்றி பன்னாட்டு திரை - பண்பாடு ஆய்வகத்தின் அர்ப்பணிப்போடு கூடிய செயல்பாடுகளுக்கும் சான்றாக அமைந்தது. இந்த விழா ஒரு கல்விப் பயணத்தின் சிகர நிகழ்ச்சியாக அமைந்ததோடு அல்லாமல் திரைப்படத் துறையின் எல்லையற்ற சாத்தியக்கூறுகளுக்கு ஆற்றுப் படுத்தும் ஒரு புதிய அத்தியாயத்தின் தொடக்கமாகவும் அமைந்தது. இறுதியாக சமூக சமத்துவத்தை அடைவதற்கான தார்மீக பொறுப்பேற்று செயல்படுவோம் என்றும் சமூக சமத்துவத்தை அடையும் மாற்றத்திற்கான காரணிகளாக

இருப்போம் என்றும் அவையின் ஆன்றோர்கள் மற்றும் பார்வையாளர்கள் முன்னிலையில் மாணவர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்தப் பட்டயமளிப்பு விழா, திரை உலகில் நாளை அசாத்திய தடங்களைப் பதிக்க காத்திருக்கும் இளம் படைப்பாளிகளின் திறனையும் உறுதியையும் எதிரொலித்த படி இனிதே நிறைவுற்றது.

# கே ஆர் வழங்கும் ஜி ஆர் எம் ஸ்டுடியோ தயாரிப்பில் ரவி முருகையா இயக்கத்தில் விதார்த், சரவணன், அருந்ததி நாயர் உள்ளிட்டோர் நடிக்கும் ‘ஆயிரம் பொற்காசுகள்‘ திரைப்படத்தை பார்க்க ஒரு டிக்கெட் வாங்கினால் ஒரு டிக்கெட் இலவசம்



சென்னை, 03 டிசம்பர் 2023: அவரது வித்தியாசமான முயற்சிகளில் சில பின்வருமாறு: உலகப் புகழ் பெற்ற 'மை டியர் குட்டிச்சாத்தான்'. இந்தியாவின் முதல் 3டி திரைப்படமான இது மாபெரும் வெற்றி பெற்றது. குழந்தைகளுக்கான 3டி படமான 'ஸ்பை கிட்ஸ்' அனிலிஃப் தொழில்நுட்பத்தில் வெளியாகி பாராட்டுதல்களையும் வெற்றிகளையும் குவித்தது. 'எங்களையும் வாழ விடுங்கள்' திரைப்படம் விலங்குகளை பேச வைத்ததோடு விலங்குகளுக்காகவும் பேசியது. 'உலக நாயகன்' கமல்ஹாசன் நடித்த 'பேசும் படம்' வசனங்களே இல்லாமல் வாழ்த்துகளை அள்ளியது. மாற்றுத்திறனாளிகளின் திறமைகளை பறைசாற்றிய 'டான்சர்' உள்ளூர் முதல் சர்வதேச விருதுகளை பெற்றது. இந்த வரிசையில், கே ஆர் வழங்கும் ரவி முருகையா இயக்கத்தில் விதார்த், சரவணன், அருந்ததி நாயர் உள்ளிட்டோர் நடிக்கும் 'ஆயிரம் பொற்காசுகள்' திரைப்படத்தை புதுமையான முறையில் வெளியிட கே ஆர் தயாராகி வருகிறார்.

டிசம்பர் 22 அன்று தமிழகம் எங்கும் உள்ள திரையரங்குகளில் ரெட் ஜெயண்ட் செண்பகமூர்த்தி மூலமாக இப்படம் வெளியாக உள்ளது. கலகலப்பான நகைச்சுவை திரைப்படமான 'ஆயிரம் பொற்காசுகள்' படத்தின் ஒரு டிக்கெட் வாங்கினால் ஒரு டிக்கெட் இலவசம், முதல் நாள் முதல் காட்சிக்கு மட்டுமே இது பொருந்தும் என்று கே ஆர் அறிவித்துள்ளார். இலவச டிக்கெட்டுக்கான கட்டணத்தை விநியோகஸ்தரே ஏற்றுக்கொள்வார்.

இது குறித்து பேசிய அவர், "ஒரு படத்தின் தலையெழுத்தை நிர்ணயிப்பதே முதல் நாள் முதல் காட்சி தான். பெரிய படங்கள் வியாபார ரீதியில் வசூலை அள்ளும் நிலையில், சிறு பட்ஜெட் படங்கள் நல்ல கதையம்சத்துடன் இருந்தாலும் கடந்த ஒரு வருடத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள□ன. ஒரே வாரத்தில் அதிகளவில் படங்கள் வெளியாவதும் இதற்கு ஒரு காரணம். சிறு பட்ஜெட் படங்களே எடுக்க வேண்டாம் என்று சிலர் கூறி வரும் நிலையில், இந்த சிக்கலுக்கு தீர்வு இதுவல்ல. ஏதாவது செய்து பார்வையாளர்களை எப்படி திரையரங்குகளை வர வைப்பது என்பது குறித்து நாம் யோசிக்க வேண்டும். அதற்கு ஒரு தீர்வாகத் தான் இந்த திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளேன்," என்றார்,

தொடர்ந்து பேசிய கே ஆர், "பெரிய படங்கள் வந்து மாபெரும் வெற்றி பெறுவது ஒரு புறம் மகிழ்ச்சி என்றாலும் சிறு திரைப்படங்கள் தொடர்ந்து வெளியாகி வெற்றி பெற்றால் தான் திரையுலகம் ஆரோக்கியமாக இருக்கும். இன்று பெரிய இடத்தில் உள்ள நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் சிறிய படங்களின் மூலம் தங்களது பயணத்தை தொடங்கியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே சிறு பட்ஜெட்டில் உருவாகும் திரைப்படங்களை புதுமையான முறையில் ஊக்குவிக்க வேண்டும் என்ற எனது விருப்பத்தின் விளைவாக இந்த முடிவை எடுத்துள்ளேன்," என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், "தமிழ்நாடு முழுவதும் உள்ள திரையரங்கு உரிமையாளர்களுடன் எனக்கு நல்ல நட்பு உள்ளதால் இந்த திட்டத்திற்கு அவர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். ரசிகர்களும் தங்களது மேலான ஆதரவை 'ஆயிரம் பொற்காசுகள்' திரைப்படத்திற்கு வழங்கி திரையரங்குகளில் இப்படத்தை கண்டு ரசித்து மகிழ்வார்கள் என்று உறுதியாக நம்புகிறேன். அனைத்து தரப்பினரும் ரசிக்கும் வகையில் :ஆயிரம் பொற்காசுகள்' உருவாகியுள்ளது," என்று தெரிவித்தார்.

ஜார்ஜ் மரியான், வெற்றிவேல் ராஜா, ஹலோ கந்தசாமி, பவுன்ராஜ், பாரதி கண்ணன், செம்மலர் அன்னம், ஜிந்தா மற்றும் ராஜா ஆகியோர் இப்படத்தில் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். ஜோகன் இசையமைக்க, பானு முருகன் ஒளிப்பதிவை கவனிக்க, ராம்-சதீஷ் படத்தொகுப்பை கையாள, அசோக் ராஜ் பாடல்களுக்கு நடனம் அமைத்துள்ளார். கலை இயக்கம்: பி சண்முகம், சண்டை பயிற்சி: ஃபயர் கார்த்திக், சவுண்ட் மிக்ஸிங்: ஏ எஸ் லட்சுமி நாராயணன், சவுண்ட் எஃபெக்ட்ஸ்: ஏ சதீஷ்குமார், பாடல் வரிகள்: நந்தலாலா, கபிலன், தனிக்கொடி, முத்துவேல், டப்பிங்: வெங்கட் சி, பலராம், ஜெமினி ஸ்டுடியோ, ஸ்டில்ஸ்: மோதிலால், டிசைன்ஸ்: சபிர், மக்கள் தொடர்பு: நிகில் முருகன்

கே ஆர் வழங்கும் ரவி முருகையா இயக்கத்தில் விதார்த், சரவணன், ஜார்ஜ் மரியான், அருந்ததி நாயர் உள்ளிட்டோர் நடிக்கும் 'ஆயிரம் பொற்காசுகள்' டிசம்பர் 22 அன்று திரையரங்குகளில் வெளியாக உள்ள நிலையில், முதல் நாள் முதல் காட்சியில் இத்திரைப்படத்தை பார்க்க விரும்புபவர்கள் ஒரு டிக்கெட் வாங்கினால் ஒரு டிக்கெட் இலவசமாக வழங்கப்படும் என்ற புதுமையான திட்டத்தை முதல் முறையாக கே ஆர் வெளியிட்டுள்ளார்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# தமிழக அரசின் ஆதரவுடன் இந்தோ சினி அப்ரிசியேஷன் ஃபவுண்டேஷன் பிவிஆர் உடன் இணைந்து வழங்கும் 21வது சென்னை சர்வதேச திரைப்பட விழா



சென்னை, 03 டிசம்பர் 2023: **திரைப்படவிழா நடைபெறும் தேதிகள்: 14 டிசம்பர் 2023 முதல் 21 டிசம்பர் 2023 வரை இடங்கள்: பிவிஆர் ஐநாக்ஸ் சினிமாஸ் (முன்னர் சத்யம் சினிமாஸ் - சாந்தம், சீசன், சிக்ஸ் டிகிரி, சேரின் ஸ்க்ரீன்ஸ்) & அண்ணா சினிமாஸ் தொடக்க விழா: பிவிஆர் ஐநாக்ஸ் சினிமாஸ் - சத்யம் திரை (டிசம்பர் 14, 2023 மாலை 6:00 மணிக்கு) நிறைவு விழா: பி வி ஆர் ஐநாக்ஸ் சினிமாஸ் - சத்யம் திரை (டிசம்பர் 21, 2023 மாலை 6:00 மணிக்கு)** தமிழ்த் திரைப்படப் போட்டிப் பிரிவினருக்கு, சமர்ப்பிப்புச் செயல்முறை மற்றும் உள்ளீடுகளைப் பெறுவதற்கான கடைசித் தேதி 7 நவம்பர் 2023 என ப்ரெஸ், எங்கள் இணையதளம் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் ஐ சி ஏ எஃப் தெரிவிக்கிறது. முன்னோட்டக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட 12 படங்கள் பத்திரிக்கையாளர் சந்திப்பில் அறிவிக்கப்படும். 30 நவம்பர் 2023 அன்று. இந்த ஆண்டும் நாங்கள் 9 விருதுகளை வழங்கவுள்ளோம்.

இந்த ஆண்டு, ஃபிலிம்ஃப்ரீவே மூலம் உள்ளீடுகளை அழைப்பதற்காக முதல் முறையாக உலக சினிமா வகைக்கான போட்டியை அறிமுகப்படுத்துகிறோம். பதில் ஊக்கமளிப்பதாக இருந்தது. இந்தப் பிரிவின் கீழ் 12 திரைப்படங்களைத் தேர்ந்தெடுத்துள்ளோம், மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட படங்களின் பட்டியல் நவம்பர் 30, 2023 அன்று நடைபெறும் பத்திரிக்கையாளர் சந்திப்பில் அறிவிக்கப்படும். சான்றிதழ்கள் மூலம் 2 விருதுகள் மற்றும் 1 சிறப்புக் குறிப்புகளை வழங்குவோம்.

21வது சென்னை சர்வதேச திரைப்பட விழாவின் சிறப்பம்சங்கள்

நாடுகளின் எண்ணிக்கை: 57 திரைப்படங்களின் எண்ணிக்கை: 126 விருந்தினர்கள்: இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு வெளிநாட்டு தூதரகங்களின் தூதர்கள் மற்றும் உலகம் முழுவதிலுமிருந்து திரைப்பட இயக்குநர்கள் தொடக்கத் திரைப்படம்: ஜஸ்டின் ட்ரைட் எழுதிய அனாடமி ஆஃப் எ ஃபால் (கேன்ஸ் திருவிழா 2023, பால்ம் டி'ஓர் வெற்றியாளர்) அல்லது விம் வெண்டர்ஸின் பேர்ப்பக்ட் டேஸ் (கேன்ஸ் விழா 2023, சிறந்த நடிகர் விருது வென்றவர்) இறுதிப் படம்: ஸ்ஒயிட் டிட்ரொமேன் எழுதிய ஸ்வீட் ட்ரீம்ஸ் (ஆஸ்கார் 2024க்கான நெதர்லாந்தின் நுழைவு) அல்லது நன்னி மோரேட்டியின் எ பிரைட்டர் டுமாரோ (கேன்ஸ் திருவிழா 2023, பால்ம் டி'ஓர் பரிந்துரைக்கப்பட்டவர்) மற்ற விருது வென்ற படங்கள்: ஆஸ்கார் பரிந்துரைகள் மற்றும் தேர்வுகள் 1. 2018: யவிரிஒன் இஸ் எ ஹீரோ (இந்தியா) 2. தி டீச்சர்ஸ் லவுஞ்ச் (ஜெர்மனி) 3. பேர்ப்பக்ட் டேஸ் (ஜப்பான்) 4. டு நாட் எஸ்பெக்ட் டூ மச் பிரம் தி யேண்டு ஆப் தி வேர்ல்ட் (ருமேனியா) 5. பாலன் லீப்ஸ் (பின்லாந்து) 6. இன்ஷா அல்லாஹ் எ பாய் (ஜோர்டான்) 7. ஸ்வீட் ட்ரீம்ஸ் (நெதர்லாந்து) 8. மெலடி (தஜிகிஸ்தான்) கேன்னஸ் திரைப்பட விழா வெற்றியாளர்கள் 1. ஜஸ்டின் ட்ரைட் எழுதிய அனாடமி ஆஃப் எ ஃபால் (பாம் டி'ஓர் வெற்றியாளர்) 2. மோலி மானிங் வாக்கர் எழுதிய ஹொவ் டு ஹவ் செஸ் (நிச்சயமற்ற வெற்றி) 3. நன்னி மோரேட்டியின் எ பிரைட்டர் டுமாரோ 4. ஜெசிகா ஹவுஸ்னரின் கிளப் ஜீரோ 5. அகி கவுரிஸ்மாகியின் பாலன் லீப்ஸ் 6. மார்கோ பெல்லோச்சியோவின் கிட்ணப்டு 7. கென் லோசின் தி ஓல்டு ஓக் 8. விம் வெண்டர்ஸ்யின் பேர்ப்பக்ட் டேஸ் பெர்லின் சர்வதேச திரைப்பட விழா - வெற்றியாளர்கள் 1. 20,000 ஸ்பீசிஸ் ஆப் பீஸ் எஸ்டிபாலிஸ் உர்ரெசோலா சோலாகுரென் (சிறந்த முன்னணி செயல்திறன் வெற்றியாளர் மற்றும் கோல்டன் பெர்லின் பியர் வேட்பாளர்) 2. அப்பயர் பை கிறிஸ்டியன் பேட்ஸ்ஒல்டு (சில்வர் பெர்லின் பியர் வெற்றியாளர் மற்றும் கோல்டன் பெர்லின் பியர் வேட்பாளர்) 3. பிலிப் கேரலின் திப்லோ (வெள்ளி பெர்லின் பியர் வெற்றியாளர் மற்றும் கோல்டன் பெர்லின் பியர் வேட்பாளர்) புசான் சர்வதேச திரைப்பட விழா, ஃபஜ்ர் திரைப்பட விழா, வெனிஸ் திரைப்பட விழா, சான் செபாஸ்டியன் சர்வதேச திரைப்பட விழா மற்றும் லோகார்னோ சர்வதேச திரைப்பட விழா போன்ற பிரபலமான திரைப்பட விழாக்களின் படங்கள்.

ஈரானிய திரைப்படங்கள்: 8 படங்கள் நாடு கவனம் - கொரியா: 5 படங்கள் (உபயம்: கொரியக் குடியரசுத் துணைத் தூதரகம் சென்னையில்) ஜெர்மன் சினிமா: 2 படங்கள் (உபயம்: கோதே-இன்ஸ்டிட்யூட், சென்னை), அப்பயர் - பெர்லிநேல் உட்பட வெள்ளி கரடி வெற்றியாளர் பிரெஞ்சு திரைப்படங்கள்: 3 படங்கள் (உபயம்: அலையன்ஸ் ஃபிரான்சாய்ஸ் ஆஃப் மெட்ராஸ்) சமகால சினிமா ஹங்கேரியில் இருந்து: 3 படங்கள் (உபயம்: லிஸ்ட் இன்ஸ்டிடியூட் - ஹங்கேரியன் கல்ச்சுரல் சென்டர், புது டெல்லி) மெக்சிகோவின் காட்சிகள்: 3 படங்கள் (உபயம்: இந்தியாவில் உள்ள மெக்சிகோ தூதரகம், புது டெல்லி) பின்னோக்கி இயக்குனர் லாயிஸ் போடன்ஸ்கி: 3 படங்கள் (உபயம்: இந்தியாவில் பிரேசில் தூதரகம், புது தில்லி) தைவான் கிளாசிக்ஸ்: 2 படங்கள் (உபயம்: சென்னையில் உள்ள தைபே பொருளாதாரம் மற்றும் கலாச்சார மையம்) ஆஸ்திரேலிய பழங்குடியினர் திரைப்படங்கள்: 2 படங்கள் (உபயம்: சென்னையில் உள்ள ஆஸ்திரேலிய தூதரகம் - ஜெனரல்) இந்தியாவில் உள்ள போர்ச்சுகல் தூதரகம், புது தில்லி (அல்மா விவா) மூலம் தலா 1 படம் வழங்கப்பட்டது; ஃபின்லாந்தில் ஃபின்னிஷ் திரைப்பட அறக்கட்டளை (பாலன் லீப்ஸ்); சென்னையில் ரஷியன் ஹவுஸ் (நியுர்ன்பெர்க்) மற்றும் ஈரானில் உள்ள ஃபராபி சினிமா அறக்கட்டளையின் 2 படங்கள் (கேப்டன், லெதர் ஜாக்கெட் மேன்)

இந்தியன் பனோரமா: ஆஸ்கார் 2024 உட்பட 19 படங்கள் (6 படங்கள் டி எஃப் எஃப், என் எஃப் டி சி இந்தியாவின் உபயம்) பரிந்துரைக்கப்பட்ட இந்திய திரைப்படம் '2018: யவிரிஒன் இஸ் எ ஹீரோ' தமிழ் அம்சம் திரைப்படப் போட்டி: 12 படங்கள் அஞ்சலி: ஹங்கேரிய நடிகர் பீட்டர் அன்டோராய்க்கு அஞ்சலி சுற்றுச்சூழல் பற்றிய திரைப்படங்கள்: கண்ணே கலைமானே (தமிழ்) ஹியர் கம்ஸ் தி லிப்போர்ட் (கன்னடம்) தமிழ்நாடு அரசு எம்ஜிஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவன மாணவர்களின் குறும்படங்கள்

ஐ சி எப் எப் முதல் முறையாக:

உலக சினிமா பிரிவில்:

வியட்நாம், ஜோர்டான், சவூதி அரேபியா, கத்தார், தஜிகிஸ்தான், பனாமா, மங்கோலியா, கஜகஸ்தான், ரீயூனியன், உருகுவே, மாசிடோனியா, யுஏஇ மற்றும் திபெத் திரைப்படங்கள்

முக்கிய வகுப்பு:

அவிச்சி கல்லூரியின் ஏற்பாட்டில் திரைப்படத்துறை மற்றும் இலக்கியத்துறையைச் சேர்ந்த பிரபலங்கள் 12 அமர்வுகளை நடத்துகிறோம்.

இந்த ஆண்டு டிஜி வைஷ்ணவ் கல்லூரி மற்றும் எத்திராஜ் கல்லூரியில் இருந்து மாணவர் தன்னார்வலர்களை அழைத்துச் செல்வோம்.

பிரதிநிதி பதிவு

அண்ணா சினிமாஸ், #21, அண்ணாசாலை (மவுண்ட் ரோடு), சென்னை என்ற முகவரியில் நேரடிப் பதிவு. தினமும் காலை 10:30 முதல் மாலை 6:00 மணி வரை (1 டிசம்பர் 2023 முதல்)

ஆன்லைன் பதிவு - www.icaf.in <http://www.icaf.in> / www.chennaifilmfest.com<http://www.chennaifilmfest.com> / <https://insider.in/21st-chennai-international-film-festival-dec14-2023/event>

# மூலப்பொருள் மற்றும் கழிவு தீவனங்களை விட கலவை தீவனம் அதிக பால் உற்பத்தி செய்கிறது

சென்னை, 03 டிசம்பர் 2023: கால்நடைகள் பல குடும்பங்களுக்கு நிதி ஆதாரமாக உள்ளது. எனவே, ஆரோக்கியமான விலங்குகளை வளர்ப்பதில் ஊட்டச்சத்து மிக முக்கியமான அம்சமாக இருப்பதால், கால்நடைகளின் சிறந்த ஆரோக்கியம் சிறந்த வருவாய்க்கான ஒரு மகத்தான ஆற்றலைக் கொண்டுள்ளது.

துரதிர்ஷ்டவசமாக, 94.69 லட்சம் கால்நடைகள் உள்ள தமிழ்நாடு மாநிலத்தில், கால்நடைகளின் ஆரோக்கியத்தில் குறைந்த கவனம் மாத்திரமே செலுத்தப்படுகிறது. பெரும்பாலான கால்நடை பண்ணையாளர்கள் தங்கள் கால்நடைகளுக்கு உணவகங்களில் இருந்து பெறப்படும் மூலப்பொருட்கள் மற்றும் கழிவு தீவனங்களை வழங்குவதால், கன உலோகங்கள், பூச்சிக்கொல்லி எச்சங்கள், காரத்தன்மை கொண்டவைகள் மற்றும் பூசணக்கொல்லிகள் ஆகியவை விலங்குகளின் ஆரோக்கியத்தை மோசமாக பாதிக்கின்றன.

இப்பகுதியில் விவசாயக் குடும்பங்களை மேம்படுத்துவதில் விலங்குகளின் ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசுகையில், கோத்ரேஜ் அக்ரோவெட் லிமிடெட் (ஜி ஏ வி எல்) அனிமல் ஃபீட் பிசினஸ் இன் தலைமை செயல் அதிகாரி சந்தீப் சிங், "பால் பண்ணைத் தொழில் என்பது மாடுகளின் பால் கறப்பது மட்டுமே என்று ஒரு கட்டுக்கதை உள்ளது. இருப்பினும், கால்நடைகளின் ஆரோக்கியத்தின் கண்ணோட்டத்தில் ஒரு விவசாயி இதைப் பார்த்தால், அது கால்நடைகளின் சிறந்த நல்வாழ்வை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல், சிறந்த விளைச்சலைப் பெறவும் விவசாயிகளுக்கு உதவுகிறது, அதன் மூலம் அவர்களின் இலாபத்தன்மையை அதிகரிக்கிறது.

இந்தச் சூழலை எதிர்கொள்ள, ஜி ஏ வி எல், கால்நடைகளின் ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி, மூலப்பொருள் மற்றும் கழிவுத் தீவனங்களுக்குப் பதிலாக கலவை தீவனத்தை மாற்றுவதைக் குறித்து விவசாயிகளுக்குக் கற்பிக்க விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மற்றும் விவசாயிகள் கூட்டங்களைத் தொடர்ந்து நடத்துகிறது. பால் பண்ணை தொழிலில் கலப்பு தீவனத்தின் முக்கிய பங்கை வலியுறுத்தி, பால் விளைச்சலை அதிகரிக்க பண்ணைகளில் கால்நடைகளுக்கு முறையான குடிநீர் ஏற்பாடு செய்வது எவ்வளவு அவசியம் என்பது குறித்தும் விவசாயிகள் கற்பிக்கப்படுகிறார்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த நிறுவனம் கண்ட, அதே போக்கு பின்பற்றப்படுகிறது என்பதற்கேற்ப, கால்நடைகள் மேய்ச்சலுக்கு விடப்படும்போது போதுமான தண்ணீரை உட்கொள்கின்றன என்று விவசாயிகள் நம்புகிறார்கள் மூலப்பொருட்கள் மற்றும் கழிவு தீவனங்களை விட கலவை தீவனத்தின் மற்றொரு நன்மையை பற்றி குறிப்பிடுகையில் சிங் மேலும் கூறினார், "பால் பண்ணையாளர்களின் வெற்றி ஒரு பல்வேறு காரணிகளை சார்ந்துள்ளது மேலும் பெரும்பாலும் தீவனத்தை சார்ந்துள்ள இனப்பெருக்க திறன் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. பால் உற்பத்திக்கான மொத்தச் செலவில் 70%, தீவனத்தைச் சார்ந்து இருப்பதால், அதிக மகசூல் தரும் கால்நடைகள் தினசரி உணவில் போதுமான ஊட்டச்சத்துகளைப் பெற்றால் மட்டுமே அவற்றின் மரபணு அளவை அடைய முடியும். எனவே எங்கள் கூட்டு தீவன தயாரிப்புகளான கோத்ரேஜ் பை ப்ரோ மற்றும் கோத்ரேஜ் பைபாஸ் ஆகியவை பால் கொடுக்கும் கால்நடைகள் தங்கள் முழு உற்பத்தித்திறனை அடையவும், அவற்றின் இனப்பெருக்க ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் உதவுகின்ற வகையில் ஒவ்வொரு கிராம் தீவனத்திற்கும் அதிக ஊட்டச்சத்தை வழங்குகின்றன. கால்நடைகளின் நல்வாழ்வை பாதுகாக்க ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம், விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை நேரடியாக மேம்படுத்தும் பால் விளைச்சலை அதிகரிக்க ஒரு சாத்தியம் உள்ளது என்று ஜி ஏ வி எல் உறுதியாக நம்புகிறது.

# கலைப்புலி எஸ் தாணுவின் வி கிரியேஷன்ஸ் தயாரிப்பில் மிஷ்கின் இயக்கத்தில் விஜய் சேதுபதி நடிக்கும் ட்ரெயின் படத்தின் படப்பிடிப்பு இன்று பூஜையுடன் தொடங்கியது



சென்னை, 03 டிசம்பர் 2023: சமீபகாலமாக வெற்றிப் படங்களை கொடுத்து மகிழ்ச்சியில் இருக்கும் நடிகர் விஜய் சேதுபதி முதன்முறையாக இயக்குனர் மிஷ்கினுடன் கைகோர்த்து உள்ளார். ட்ரெயின் திரைப்படத்தை தமிழ்த் திரையுலகின் மாபெரும் வெற்றி படங்களை கொடுத்த பிரம்மாண்ட தயாரிப்பாளர் கலைப்புலி.எஸ்.தாணு இந்த ட்ரெயின் படத்தை தயாரிக்கிறார்.

இந்த கதை ஒரு ரயில் பயணத்தில் நடைபெறும் அதிரடி திகில் நிறைந்த கதை என கூறப்படுகிறது, எனவே ட்ரெயின் என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. இத்திரைப்படத்திற்காக விஜய் சேதுபதி வித்தியாசமான தோற்றத்தில் காணப்படுகிறார், மேலும் அவரது தோற்றத்திற்காக நிறைய மாற்றங்களைச் செய்துள்ளார். டிம்பிள் ஹயாதி அழுத்தமான கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

இப்படத்தில் ஈரா தயானந்த், நாசர், வினய் ராய், பாவனா, சம்பத் ராஜ், பப்லு பிருத்விராஜ், கே.எஸ்.ரவிக்குமார், யூகி சேது, கணேஷ் வெங்கட்ராமன், கனிஹா, தியா சீதிபள்ளி, சிங்கம் புலி, ஸ்ரீரஞ்சனி, அஜய் ரத்னம், திரிகுன் அருண், ராச்சல் ரபேக்கா மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

தனது இசைத்திறமையை வெளிப்படுத்தி வரும் இயக்குனர் மிஷ்கின் இப்படத்திற்கும் இசையமைக்கிறார். பௌசியா பாத்திமா ஒளிப்பதிவு செய்ய, ஸ்ரீ வத்சன் படத்தொகுப்பை கவனிக்க, கலை இயக்கத்தை வி. மாயபாண்டி மேற்கொள்கிறார்.

ட்ரெயின் படத்தின் படப்பிடிப்பு இன்று காலை பூஜையுடன் தொடங்கியது. பூஜையில் இயக்குனர் வெற்றிமாறன், நடிகர் சங்கத்தின் தலைவர் நடிகர் நாசர், தயாரிப்பாளர் சங்கத்தின் நிர்வாகிகள் முரளி ராமசாமி, ராதாகிருஷ்ணன், எஸ் கதிரேசன், தயாரிப்பாளர் அண்புச்செழியன், கல்யாணம் (நாக் ஸ்டுடியோஸ்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

நடிகர்கள்:

விஜய் சேதுபதி, டிம்பிள் ஹயாதி, ஈரா தயானந்த், நாசர், வினய் ராய், பாவனா, சம்பத் ராஜ், பப்லு பிருத்விராஜ், கே.எஸ்.ரவிக்குமார், செல்வா சந்திரசேகர், யூகி சேது, கணேஷ் வெங்கட்ராமன், கனிஹா, தியா சீதிபள்ளி, சிங்கம் புலி, ஸ்ரீரஞ்சனி, அஜய் ரத்னம், திரிகுன் அருண், ராச்சல் ரபேக்கா

தொழில்நுட்ப குழு:

இயக்கம் மற்றும் இசை: மிஷ்கின், தயாரிப்பாளர்: 'கலைப்புலி' எஸ் தாணு, நிர்வாக தயாரிப்பு : எல். வி. ஸ்ரீகாந்த், ஒளிப்பதிவு: பௌசியா பாத்திமா, படத் தொகுப்பு: ஸ்ரீவத்சன்

கலை இயக்குனர்: வி.மாயபாண்டி, ஆடை வடிவமைப்பாளர்: ஷைமா அஸ்லாம், பாடங்கள்: ஜெ.ஹரிசங்கர், ஒலி வடிவமைப்பாளர்: ஜெஸ்வின் மேத்யூ, நிர்வாக தயாரிப்பாளர்: ஆர். உதயகுமார், தயாரிப்பு நிறுவனம்: வி கிரியேஷன்ஸ், மக்கள் தொடர்பு : ரியாஸ் கே அஹ்மத் (வி4யூ மீடியா), டீம் ஏஐஎம்

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

## முதலீட்டாளர்கள் இந்தியாவின் உற்பத்தி புரட்சியிலிருந்து பயனடைவதை நோக்கமாகக் கொண்டு, ஆக்சிஸ் மியூச்சுவல் ஃபண்ட் 'ஆக்சிஸ் இந்தியா மேனுஃபேக்ச்சரிங் ஃபண்ட்' ஐ அறிமுகப்படுத்துகிறது

சென்னை, 03 டிசம்பர் 2023: இந்தியாவின் வளர்ந்து வரும் உற்பத்திக் கருப்பொருளின் திறனைப் பயன்படுத்துவதற்கான ஒரு முயற்சியில், இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் நிதி நிறுவனங்களில் ஒன்றான ஆக்சிஸ் மியூச்சுவல் ஃபண்ட், ஆக்சிஸ் இந்தியா மேனுஃபேக்ச்சரிங் ஃபண்ட் இன் அறிமுகத்தை அறிவித்துள்ளது. இந்த சமீபத்திய வழங்கலானது, இந்திய உற்பத்தி கருப்பொருளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு ஓப்பன்-எண்டட் ஈக்விட்டி திட்டமாகும் மற்றும் நிஃப்டி இந்தியா மேனுஃபேக்ச்சரிங் டிஆர் ஐ-கு எதிராக தரநிலைப்படுத்தப்படும் இந்த புதிய நிதி வழங்கல் , டிசம்பர் 1, 2023 அன்று திறக்கப்படும் மற்றும் இது வரும் ஆண்டுகளில் வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிற இந்தியாவின் உற்பத்தி கருப்பொருள் திறனைப் பயன்படுத்துவதற்கு முதலீட்டாளர்களை செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த புதிய நிதி வழங்கல் டிசம்பர் 15, 2023 வரை திறந்திருக்கும்.

"மேக் இன் இந்தியா' போன்ற மூலோபாய முன்முயற்சிகள் மற்றும் சீர்திருத்தங்களின் ஒரு மிகுதி மூலம், இந்தியாவின் பொருளாதாரம் ஊக்கமளிக்கும் ஒரு முக்கியமான கட்டத்தில் இந்த ஆக்சிஸ் இந்தியா மேனுஃபேக்ச்சரிங் ஃபண்ட் வந்துள்ளது," என ஆக்சிஸ் எ எம் சி-ன் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி பி. கோப் குமார் விளக்கினார். "இந்த கருப்பொருள் சார்ந்த நிதி, இந்தியாவின் தொழில்துறை வரையறைகளை மறுவரையறை செய்ய நிற்கும் துறைகளில் கவனம் செலுத்தி இந்தியாவின் வளர்ந்து வரும் வேகத்தைப் பயன்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது இந்தியாவின் உற்பத்தி லட்சியங்களுடன் வளர வடிவமைக்கப்பட்ட ஒரு நிதியான ஆக்சிஸ் இந்தியா மேனுஃபேக்ச்சரிங் ஃபண்ட் உடன் எதிர்காலத்தை வரவேற்க முதலீட்டாளர்களை அழைக்கிறோம், " என்று திரு. பி.கோப்குமார் மேலும் கூறினார்.

ஏன் "உற்பத்தி" தீம்?

இந்தியா, புதிய யுக தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வது மற்றும் நிலையான வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிப்பது ஆகியவற்றை குறிப்பதன் மூலம் ஒரு அற்புதமான எதிர்காலத்தை நோக்கிச் செல்கிறது, அரசாங்க முன்முயற்சிகள் மற்றும் தொழிலாளர் மற்றும் வரி சீர்திருத்தங்கள் இந்தியாவை ஒரு உலகளாவிய போட்டி உற்பத்தி மையமாக மாற்றுகின்றன. மற்ற பொருளாதாரங்களைப் போலல்லாமல், இந்தியப் பொருளாதாரம் நுகர்வை பெரிதும் சார்ந்துள்ளது, இது உலகப் பொருளாதார மாறுபாடுகளுக்கு குறைவான சூழற்சியை உருவாக்குகிறது. வேகமான வளர்ச்சிக்கான சில முக்கிய காரணங்கள், தயாரிப்புகளுக்கான தேவையை அதிகரிக்கின்ற பொருளாதார உணர்வை மேம்படுத்தி வருகிறது. மற்றும் அதிக திறன் கொண்ட பயன்பாடு பொருளாதாரத்தை அளவிடுவதற்கு இது உதவுகிறது. எனவே, இது கீழே காணப்படுவது போல் மூன்று-முனை வாய்ப்பைக் குறிக்கிறது

ஆதாரம்: ஆக்ஸிஸ் எம் எஃப் ஆராய்ச்சி 30 செப்டம்பர் 2023 இன் படி

" கணிசமான அரசாங்க உத்வேகம், சாதகமான கொள்கை கட்டமைப்புகள் மற்றும் உலகளாவிய சகாக்களுக்கு அதன் மேம்படுத்தப்பட்ட செலவு போட்டித்திறன் ஆகியவற்றால் இந்தியா வேகமாக மாறுகிறது" என்று ஆக்சிஸ் எ எம் சி-ன் தலைமை முதலீட்டு அதிகாரி ஆஷிஷ் குப்தா அவதானித்தார். ஆக்சிஸ் இந்தியா மேனுஃபேக்ச்சரிங் ஃபண்ட் மூலம், கருப்பொருளின் வலுவான வளர்ச்சித் திறனைப் பிரதிபலிப்பதோடு மட்டுமல்லாமல், இந்த தொழில்துறை மறுமலர்ச்சியின் முன்னோடிகளாக இருக்கும் நிறுவனங்களில் இருந்து பயனடையும் அவர்களை நிலைநிறுத்தி எங்கள் முதலீட்டாளர்களின் செல்வத்தை உருவாக்கும் வாய்ப்புகளுக்குத் தீவிரமாகப் பங்களிக்கும் ஒரு போர்ட்ஃபோலியோவை கையாள்வதை நாங்கள் இலக்காகக் கொண்டுள்ளோம்."

ஆக்சிஸ் இந்தியா மேனுஃபேக்ச்சரிங் ஃபண்ட்

இந்த ஆக்சிஸ் இந்தியா மேனுஃபேக்ச்சரிங் ஃபண்ட், இந்தியப் பொருளாதாரத்தின் கட்டமைப்பு மாற்றங்களில் இருந்து பயனடையத் தயாராக இருக்கும் கருப்பொருள்களில் மூலோபாய ரீதியாக முதலீடு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தியாவின் உற்பத்தித் திறனின் அகலத்தையும் ஆழத்தையும் பிரதிபலிக்கும் வகையில், ஒரு பன்முகப்படுத்தப்பட்ட அணுகுமுறையை வழங்க இந்த நிதி முயல்கிறது. இது மூலதனப் பொருட்கள் மற்றும் நுகர்வோர் பொருட்கள் முதல் ஐவுளி மற்றும் மருந்துகள் வரை ஒரு பரந்த அளவிலான தொழில்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது, இதன் மூலம் முதலீட்டாளர்களுக்கு இந்தியாவின் உற்பத்தி வெற்றி வரலாற்றில் பங்கேற்பதற்கான ஒரு விரிவான வழியை வழங்குகிறது.

## சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கு நாளை பொது விடுமுறை

சென்னை, 03 டிசம்பர் 2023: வங்கக் கடலில் உருவாகியுள்ள 'மிக்ஜாம்' புயல் காரணமாக சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய 4 மாவட்டங்களுக்கு நாளை பொதுவிடுமுறை என தமிழக அரசு அறிவித்துள்ளது.



வங்கக் கடலில் உருவாகியுள்ள 'மிக்ஜாம்' புயல் காரணமாக இன்றும், நாளையும் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் மிக கன மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்திருப்பதால், அந்த 4 மாவட்டங்களுக்கு நாளை பொதுவிடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் தனியார் அலுவலகங்களுக்கும் விடுமுறை விட அறிவுறுத்தப்பட்டுள்ளது .

அத்தியாவசிய தேவையான பால், குடிநீர், மின்சாரம், மருத்துவமனை, போலீஸ் துறை, தீயணைப்பு, மருந்து கடைகள், உணவகங்கள், போக்குவரத்து, பெட்ரோல் பங்க், உள்ளாட்சி அமைப்புகள் உள்ளிட்டவை இயங்கும்.

வாரியம், வங்கிகள், நிதி நிறுவனங்கள் உள்ளிட்டவற்றுக்கு பொதுவிடுமுறை அறிவித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

## அசௌகரியங்களுக்கு மத்தியில் உறங்குகிறீர்களா?

### தூய்மையான உறக்க சூழலை உருவாக்குவதற்காக நிபுணர் வழங்கும் உதவிக்குறிப்புகள்

சென்னை, 03 டிசம்பர் 2023: ஆரோக்கியமான உறக்க சூழலைப் பற்றி பேசும்போது கதிர்வீச்சு, நிலையான இணைப்பு போன்ற பல விஷயங்களை நாம் வழக்கமாக கருதுகிறோம். ஆனால் உங்கள் படுக்கை எவ்வளவு சுத்தமாக இருக்கிறது என்று நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா? ஒரு நல்ல உறக்க சூழலை உருவாக்கும் படுக்கை முக்கியமானது. டைசன் நிறுவனத்தில் நுண்ணுயிரியல் துறையில் மேல்நிலை ஆராய்ச்சி விஞ்ஞானியாகத் திகழும் ஜோன் காங் உங்கள் தூக்கம் மற்றும் ஆரோக்கியத்தைப் பாதிக்கும் ஒரு மறைமுக ஆபத்து பற்றி பேசுகிறார். உங்கள் படுக்கையையைச் சுத்தமாக்குவதற்கான உதவிக்குறிப்புகளையும் அவர் வழங்குகிறார்.



பிரச்சனை என்ன?

உங்கள் மெத்தை பார்ப்பதற்குச் சுத்தமாகத் தோன்றினாலும், அது உண்மையில் சிறிய உயிர்களுக்கு இனப்பெருக்கம் செய்யும் இடமாக இருக்கலாம். வீட்டுப் பூச்சிகள், பாக்டீரியாக்கள், வைரஸ்கள், மகரந்தம் மற்றும் பிற ஒவ்வாமைகளை உள்ளடக்கிய வீட்டுத் தூசி, உங்கள் மெத்தையில் சிக்கலான கலவையை உருவாக்கி, முக்கியமான தூய்மைப் பிரச்சினைகளை எழுப்புகிறது. இது படுக்கைத் துணிகள் மற்றும் தலையணை உறைகளுக்கும் பொருந்தும், ஏனெனில் அவை தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிரிகளை தங்கள் துணிகளுக்குள் அடைத்து விரும்பத்தகாத துகள்களின் வளர்ச்சிக்கு சாதகமான சூழலை வழங்குகின்றன.

அமீரிஸ்லீப் நடத்திய ஆய்வில், ஒரு நல்ல இரவு தூக்கத்திற்காக நாம் பயன்படுத்தும் தலையணை உறை பற்றிய ஆச்சரியமான உண்மை தெரியவந்துள்ளது. ஒரு வாரத்தில், துவைக்கப்படாத தலையணை உறை 3 மில்லியன் பாக்டீரியாக்களைச் சேகரிக்கும், இது சராசரி கழிப்பறை இருக்கையை விட சுமார் 17,000 மடங்கு அதிகமாக மாசுபடுகிறது. கூடுதலாக, டைசன் குளோபல் டஸ்ட் ஸ்டடி 2023 இன் கண்டுபிடிப்புகளின்படி, 60% இந்தியர்கள் கழிப்பறைகளில் அதிக வைரஸ்கள் இருப்பதாக நம்புகிறார்கள், மேலும் 5 இந்தியர்களில் 2 பேர் மட்டுமே தங்கள் மெத்தைகளைத் தவறாமல் சுத்தம் செய்கிறார்கள். ஒரு தனி மெத்தையில் மில்லியன் கணக்கான வீட்டுப் பூச்சிகள் இருக்கும், சராசரியாக ஒவ்வொரு வீட்டுப் பூச்சியும் தினமும் சுமார் 20 மலக் கழிவுகளை உற்பத்தி செய்கிறது. வீட்டுப் பூச்சிகள் மட்டும் ஒவ்வாமையை ஏற்படுத்தாது என்றாலும், அவற்றின் மலக் கழிவுகளில் இருக்கும் ஒவ்வாமை மற்றும் புரதங்கள் உண்மையில் ஒவ்வாமையால் ஏற்படும் எதிர்வினைகளைத் தூண்டும்.

தீர்வு: இவற்றைச் செய்யலாம்:

சுத்தமான மற்றும் சுகாதாரமான உறக்க சூழலை உறுதி செய்ய, படுக்கையறையில் இருந்து தூசி மற்றும் ஒவ்வாமைகளை அகற்ற தினசரி சுத்தம் மற்றும் வேக்யூமிற்கு முன்னுரிமை அளிப்பது முக்கியம். அதற்கான நான்கு எளிய குறிப்புகள்:

1. மெத்தையை அவ்வப்போது துவைத்து மாற்றுதல். மெத்தைகள், தலையணை உறைகள் மற்றும் போர்வைகளை வெந்நீரில் குறைந்தது 140 குஎஃப் வெப்பநிலையில் துவைப்பது ஒவ்வாமையைக் குறைக்க உதவும். வருடத்திற்கு ஒரு சில முறை மட்டுமே உங்கள் மெத்தையை வேக்யூம் செய்தாலும், நுண்ணிய தோல் செதில்களை அகற்றவும், தூசி மற்றும் ஒவ்வாமைகளை அகற்றவும் வாரத்திற்கு ஒருமுறை உங்கள் படுக்கையை சலவை செய்து மாற்றுவதற்குப் பரிந்துரைக்கப்படுகிறது.

2. மின்சாரத்தின் மூலம் மிருதுவாக வேக்யூம் செய்தல். வீட்டுப் பூச்சிகள் சிறியதாக இருக்கலாம், ஆனால் அவை தொடர்ந்து இருக்கும். அவற்றின் நகங்கள் உங்கள் மெத்தைக்குள் ஆழமான நூலிழைகளில் ஒட்டிக்கொள்ள உதவுகின்றன, இதனால் அவற்றை அகற்றுவது சவாலானது. அதிக பவர் அல்லது பூஸ்ட் பயன்முறையுடன் கூடிய வேக்யூமைப் பயன்படுத்துவது, முடிந்தவரை பூச்சிகள், தோல் செதில்கள் மற்றும் ஒவ்வாமைகளை அகற்ற தேவையான உறிஞ்சுதலை வழங்கும். நீங்கள் பயன்படுத்தும் வேக்யூம் நீங்கள் சுத்தம் செய்யும்போது ஒவ்வாமைத் துகள்கள் மீண்டும் காற்றில் வெளியேற்றப்படுவதைத் தடுக்க, முழுமையாக சீல் செய்யப்பட்ட வடிகட்டுதல் அமைப்பைக் கொண்டிருப்பதை உறுதிசெய்துகொள்ளுங்கள். ஹேர் ஸ்க்ரூ கருவியுடன் 240எடபிள்யூ பவர் வரை உறிஞ்சும் திறன் கொண்ட டைசன் கார்டுலெஸ் வேக்யூம்கள் உங்கள் மெத்தையில் பொதிந்திருக்கும் தூசியைத் திறம்பட அகற்றும். உங்கள் மெத்தையை வேக்யூம் செய்வதோடு மட்டுமல்லாமல், தோல் செதில்கள், பொடுகு, வீட்டுப் பூச்சிகள் மற்றும் ஒவ்வாமைகளை அகற்ற தலையணைகள், மெத்தைகள், மென்மையான பொம்மைகளை போன்றவற்றையும் வேக்யூம் செய்வது நல்லது.

3. மூலை முடுக்குகளை நன்கு சுத்தம் செய்தல். உங்கள் மெத்தையின் மேற்பரப்பை நன்கு சுத்தம் செய்த பிறகு, தூசி மற்றும் ஒவ்வாமைகள் சேரக்கூடிய மூலை முடுக்குகளை நன்கு சுத்தம் செய்யுங்கள். உங்கள் மெத்தையின் விளிம்புகளில், குறிப்பாக தையல்களைச் சுற்றி சுத்தம் செய்யும் போது, மறைந்திருக்கும் தூசியை அகற்ற, கையடக்க (ஹேண்ட்ஹெல்ட்) முறையில் க்ரீவிஸ் கருவியைப் பயன்படுத்துங்கள்.

நல்ல மெத்தை சுகாதாரப் பழக்கங்கள் நடைமுறைப்படுத்துதல், மெத்தையை அவ்வப்போது வேக்யூம் செய்தல் மற்றும் துவைத்தல் போன்றவை, தூசிப் பூச்சிகள் மற்றும் ஒவ்வாமைகளின் இருப்பை வெகுவாகக் குறைக்கும்.

## ஐ சி ஐ சி ஐ பேங்க், ரூபே கிரெடிட் கார்டுகள் வழியாக யூ பி ஐ செலுத்துதல்களை அறிமுகப்படுத்துகிறது

சென்னை, 03 டிசம்பர் 2023: சென்னை : ஐசி ஐசி ஐ பேங்க் அதன் வாடிக்கையாளர்களுக்கு பணம் செலுத்தும் வசதியை மேம்படுத்தும் வகையில் தனது ரூபே கிரெடிட் கார்டுகளை யூ பி ஐ பரிவர்த்தனைகளுடன் ஒருங்கிணைத்ததை இன்று அறிவித்தது. இந்த ஒருங்கிணைப்பின் மூலம், ஷாப்பிங், பயன்பாட்டு பில்களை செலுத்துதல் போன்ற தனி நபரிடமிருந்து வணிகருக்கு (பி2எம்) பரிவர்த்தனைகளை ஆன்-லைனில் மற்றும் பி ஓ எஸ் (பாயிண்ட் ஆஃப் சேல்) மெஷின் இல் பணம் செலுத்துதல் போன்றவற்றை ஆஃப்லைனிலும் சிரமமற்ற மற்றும் பாதுகாப்பான முறையில் மேற்கொள்ள ஐசிஐசி ஐ பேங்க் வாடிக்கையாளர்கள் தங்களின் ரூபே கிரெடிட் கார்டுகளை யூ பி ஐ உடன் எளிதாக இணைக்கலாம். கூடுதலாக , அவர்கள் தங்களுடைய டிஜிட்டல் பேமெண்ட் அனுபவத்தை மேம்படுத்தி, அவர்கள் செலவழித்ததில் வெகுமதி புள்ளிகளைப் பெறமுடியும்

இந்த பேங்க் அதன் ரூபே கிரெடிட் கார்டுகளில் யூ பி ஐ பரிவர்த்தனைகளை செயல்படுத்துவதற்கு நேஷனல் பேமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா (என் பி சி ஐ) உடன் கூட்டு சேர்ந்துள்ளது. வாடிக்கையாளர்கள், ஐசிஐசிஐ பேங்க் கோரல் ரூபே கிரெடிட் கார்டு, ஐசிஐசிஐ பேங்க் எச் பி சி எல் சூப்பர் சேவர் ரூபே கிரெடிட் கார்டு மற்றும் ஐசிஐசிஐ பேங்க் ரூபிக்ஸ் ரூபே கிரெடிட் கார்டு ஆகியவற்றை யூ பி ஐ உடன் இணைக்கலாம். அவர்கள் வணிகர் கியூ ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்து, ஐமொபைல் பே உட்பட எந்த யூ பி ஐ செலுத்துதல் பயன்பாட்டையும் பயன்படுத்தி அவர்களின் ரூபே கிரெடிட் கார்டுகளிலிருந்து பணம் செலுத்தலாம்.

ஐசிஐசிஐ பேங்க் இன் கார்ட்ஸ் தலைவர் பிஜித் பாஸ்கர் கூறுகையில், "எங்கள் ரூபே கிரெடிட் கார்டுகளை யூ பி ஐ உடன் உட்பொதிக்க என் பி சி ஐ உடனான எங்கள் கூட்டாண்மையை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த கூட்டாண்மையானது, வாடிக்கையாளர்களுக்கு டிஜிட்டல் செலுத்துதல்களில் மேம்பட்ட வசதியை வழங்க இந்த பேங்க் மேற்கொண்ட ஒரு முக்கிய நகர்வாக இருக்கிறது. யூ பி ஐ உடன் ரூபே கிரெடிட் கார்டுகளின் இந்த ஒருங்கிணைப்பு, வாடிக்கையாளர்களுக்கு 50 நாட்கள் வரை வட்டியில்லா கடன் வழங்குவதன் மூலம் சிறந்த நிதி பணப்புழக்கத்தை வழங்குகிறது. இந்த அம்சமானது, எங்கள் வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய எளிய ஆனால் வசதியான தீர்வுகளை வழங்குவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை வலுப்படுத்துவதற்கு என்று நாங்கள் நம்புகிறோம்." என்று கூறினார்.

இந்த கூட்டாண்மை குறித்து கருத்து தெரிவிக்கையில், என் பி சி ஐ - ன் சீஃப் ஆப்பரேட்டிங் ஆஃபீசர் பிரவீணா ராய், "ஐசிஐ சிஐ பேங்க் ரூபே கிரெடிட் கார்டுகள் இப்போது யூ பி ஐ இல் இயங்குகின்றன என்பதை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். பரந்த ஏற்றுக்கொள்ளல் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்கிற தனிப்பயன் மதிப்பு முன்மொழிவுகள் மற்றும் அதி நவீன தொழில்நுட்பத்திற்கு பெயர் பெற்ற ரூபே ஆனது ஒரு நவீன, சமகால மற்றும் துடிப்பான பிராண்டாக மாறியுள்ளது, ரூபே கிரெடிட் கார்டுகளின் நம்பகத்தன்மையுடன் யூ பி ஐ இன் பல்துறைத்திறனை இணைப்பதன் மூலம், டிஜிட்டல் செலுத்துதல்களின் சூழலை மாற்றியமைக்கிறோம். இந்த புரட்சிகர ஒருங்கிணைப்பு மூலம், பயனர்கள் டிஜிட்டல் பணம் செலுத்துவதில் இன்னும் அதிக நெகிழ்வுத்தன்மையையும் வசதியையும் அனுபவிப்பார்கள். ஐ சி ஐ சி ஐ பேங்க் உடனான எங்கள் ஒத்துழைப்பின் மூலம், ரூபே கிரெடிட் கார்டு வாடிக்கையாளர்களை ஒரு மேம்பட்ட டிஜிட்டல் செலுத்துதல் அனுபவத்துடன் மேம்படுத்துவதும், அதன் மூலம் இந்தியாவின் பொருளாதார விரிவாக்கத்தை மேலும் துரிதப்படுத்துவது எங்களது இலக்காக இருக்கிறது.